இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 312 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 07 – வியாழக்கிழமை 22 ஜூன் 2023 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 312 : Thiruvalluvar Year - 2054 - Aani 07 - Thursday 22 June 2023 - Trichy ★★ 16 Pages ₹ 5.00






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.6.2023) திருவாரூர் மாவட்டம், காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்டத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், பீகார் மாநில நீர்வளத்துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் சஞ்சய் குமார் ஜா, தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் எ.வ.வேலு, திருமதி.செல்வி செல்வம், திருமதி.சாந்தா ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தயாளு அம்மாள் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன், அறங்காவலர் சம்பத்குமார், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## மதச்சார்பற்ற சக்திகள் தமிழ்நாட்டில் ஒருமுகமாகச் செயல்படுவதுபோல்

# அகில இந்திய அளவில் ஒருங்கிணைந்து வெற்றி காண்போம்!

## திருவாரூரில் கலைஞர் கோட்டத்தைத் திறந்து வைத்து — தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.6.2023) திருவாரூர் மாவட்டம், காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்டத்தை திறந்து வைத்து உரையாற்றினார். இந்நிகழ்வில் பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், பீகார் மாநில நீர்வளத்துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் சஞ்சய் குமார் ஜா, தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தயாளு அம்மாள் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன், அறங்காவலர் சம்பத்குமார், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**திருவாரூர், ஜூன் 22 -**

**திருவாரூரில் நேற்று முன்தினம் முத்தமிழறிஞர் கலைஞர் கோட்டத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற சக்திகள் ஒருமுகமாகச் செயல்பட்டு வெற்றி காண்பது போல், அகில இந்திய அளவில் நாம் ஒருங்கிணைந்து வெற்றி காண்போம் என சூளுரைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.06.2023) திருவாரூர் மாவட்டம், காட்டூரில் கலைஞர் கோட்டத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு:-

நெஞ்சில் மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்திருக்கக்கூடிய நிலையில், உங்கள் முன்பு நான் நின்று கொண்டிருக்கிறேன்.

வான்புகழ் வள்ளுவருக்குத் தலைநகரில் கோட்டம் கண்ட தலைவர் கலைஞர் அவர்களுக்கு திருவாரூரில் கோட்டம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

### போர்ப்பரணி பாடிய திருவாரூரில் - கலைஞருக்குக் கோட்டம்!

“ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்; நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இது அல்லவே!” என்று 13 வயதில் எந்தத் திருவாரூர் வீதிகளில் போர்ப்பரணி பாடி வந்தாரோ, அதே திருவாரூரில் கலைஞருக்குக் கோட்டம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்களை கலைஞர் அவர்கள் முதன் முதலாகச் சந்தித்த ஊர் இந்த திருவாரூர்.

தலைவராகப் பிற்காலத்தில் ஆனவர் அல்ல நம்முடைய தலைவர் கலைஞர். தலைவராகவே பிறந்தவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர். அதற்கு அடித்தளமாக அமைந்த ஊர்தான் இந்த திருவாரூர்.

### கலைஞர் ஆள்கிறார் என்பதன் அடையாளமாக கம்பீரமான கோட்டம்!

மன்னர்கள்கூட தாங்கள் ஆளும் போதுதான் கோட்டமும் கோட்டையும் கட்டுவார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் நிறைவுக்குப் பிறகு கோட்டம் இங்கே எழும்பி இருக்கிறது. இன்னமும் கலைஞர் வாழ்கிறார் - ஏன் ஆள்கிறார்; என்பதன் அடையாளமாகத் தான் கம்பீரத்தோடு இந்தக் கோட்டம் இங்கே அமைந்திருக்கிறது.

எனது தாயார் தயாளு அம்மாள் அறக்கட்டளை சார்பில் கலைஞர் கோட்டம் கட்டப்பட்டுத் திறக்கப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரையில் என் தந்தைக்கு என் தாய் எழுப்பிய அன்புக் கோட்டையாகவே நான் இதைக் கருதுகிறேன்.

### கருணை உள்ளம் கொண்டவர் - எனது தாயார் தயாளு அம்மா!

‘தத்துவமேதை’ டி.கே.சீனிவாசன் அவர்களும் கவிஞர் கா.மு.ஷெரீப் அவர்களும் வாழ்த்திப் பேசிட, புரட்சித் தோட்டமான தலைவர் கலைஞரை எனது தாயார் திருமணம் செய்து கொண்டதும் இதே திருவாரூரில்தான்.

தலைவர் கலைஞர் வாழ்க்கையில் எத்தனை மேடு பள்ளங்கள் வெற்றி தோல்விகள், ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டாலும் அத்தனையையும் சிரித்த முகத்தோடு எதிர்கொண்டு எப்போதும் அதே கருணை உள்ளத்தோடு இருந்தவர் எனது தாயார் தயாளு அம்மா அவர்கள்.

கலைஞர் கோட்டம் என்பது,

- கலைஞரின் பன்முகப் பரிமாணங்களைச் சொல்லும் கருவூலம் –
- கலைஞரின் திருவுருவச்சிலை
- முத்துவேலர் நூலகம்
- இரண்டு அரங்குகள்
- இரண்டு தியேட்டர்கள்
- பாளையங்கோட்டைச் சிறையில் இருப்பது போன்ற வடிவமைப்பு
- செல்ஃபி பாயிண்ட்
- கலைஞரோடு படம் எடுத்துக் கொள்ளும் வசதி

என அனைத்தும் அடங்கியதாக இந்தக் கோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

‘திருவாரூர் தேரழகு’ என்பார்கள். அந்த திருவாரூர்த் தேர், கலைஞர் கோட்டத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. திராவிடக் கட்டடக் கலையோடு நவீன வசதிகளையும் இணைத்து இது அமைக்கப்பட்டிருக்கிறது.

**இந்த ‘திராவிட மாடல்’ ஆட்சியை நான் கலைஞருக்கு காணிக்கையாகச் செலுத்திக் கொண்டிருக்கிறேன்!**

### நானும், எனது சகோதரி செல்வியும் இணைந்து வாங்கிய நிலம்!

2018ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவுற்றபோது நானும் என்னுடைய சகோதரி செல்வியும் இந்த இடத்தை விலைக்கு வாங்கினோம். அதற்குப் பிறகு ஒரு அறக்கட்டளையின் சார்பில் கலைஞர் கோட்டமாக உருவாக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்து, நான்கு ஆண்டு காலமாக அதற்காக சிரமங்களை எல்லாம் ஏற்றுக்கொண்டு இதைக் கட்டி முடித்திருக்கிறார்கள்.

கலைஞர் கோட்டத்தைக் கட்டி முடிப்பதில் தயாளு அம்மாள் அறக்கட்டளைக்கு ஆலோசனைகள் வழங்கிய அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கு முதலில் என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பார்த்துப் பார்த்துச் செதுக்கியதைப் போல, கண்ணும் கருத்துமாக இந்தக் கலைஞர் கோட்டத்தை வடிவமைப்பதை, கவனமுடன் மேற்பார்வையிட்டார் நம்முடைய வேலு அவர்கள். அவருக்கு எத்தனை பாராட்டுகள் சொன்னாலும் தகும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## கலைஞர் ஆட்சி முறை தேசிய அளவில் பின்பற்றக்கூடியது!

# சமூக நீதியின் அடையாளம் முத்தமிழறிஞர் கலைஞர்!

## திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் – முத்துவேலர் நூலகத்தைத் திறந்து வைத்து பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் புகழாரம்!

**திருவாரூர், ஜூன் 22-**

**கலைஞர் அவர்கள் கடைப்பிடித்த சமூக நீதி, சமத்துவம் போன்ற கொள்கைகளை தேசிய அளவில் செயல்படுத்துவது அவசியம் என்று கலைஞர் கோட்டம் திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்ற பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் கூறினார்.**

திருவாரூர் அருகே காட்டூரில் தயாளு அம்மாள் அறக்கட்டளை சார்பில் ரூ.12 கோடியில் 7,000 சதுர அடி பரப்பளவில் கலைஞர் கோட்டம் கட்டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நிகழ்ச்சியில் பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் பங்கேற்றார்.

இந்த விழாவில் தேஜஸ்வி யாதவ் பேசியதாவது: -

இன்று இந்தச் சந்தர்ப்பத்தில் மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு எனது ஆழ்ந்த அஞ்சலியை செலுத்துகிறேன். புகழ்பெற்ற தலைவரான மறைந்த கலைஞர் அவர்களின் வாழ்க்கையையும், பாரம்பரியத்தையும் கொண்டாடுவதற்கு மட்டுமல்ல, நமது ஒட்டுமொத்த தேசத்தின் ஆட்சியில் அவரது எண்ணங்கள் மற்றும் கொள்கைகளின் தொடர்ச்சியைப் பற்றிச் சிந்திக்கவும் நாம் இங்கே கூடியுள்ளோம். அவரது கருத்துக்கள் யாவும் நமது மகத்தான தேசம் முழுவதும் பரவி தலைமுறைகளுக்கும் தொடர்ந்து எதிரொலித்து நமக்கு ஊக்கமளிக்கின்றன.




### விளிம்பு நிலை சமூகங்களை மேம்படுத்த பாடுபட்ட கலைஞர்!

சமூக நீதிக்கான சிறந்த பிரதிநிதியாகவும், சமூக ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கும், விளிம்புநிலை சமூகங்களை மேம்படுத்துவதற்கும் பல கொள்கைகள் மற்றும் முன்முயற்சிகளை செயல்படுத்துவதில் கலைஞர் கருவியாக செயல்பட்டார்.

கல்வி நிறுவனங்கள், அரசுப்பணிகள் மற்றும் அரசியல் பிரதி நிதித்துவம் ஆகியவற்றில் பட்டியலின சாதிகள், பட்டியலின பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் உள்ளிட்ட சமூக ரீதியாக பின்தங்கிய எல்லா சமூகங்களுக்கான இடஒதுக்கீட்டு கொள்கைகளை செயல்படுத்தி, அதை விரிவுபடுத்துவதிலும் அவர் முக்கிய பங்காற்றினார். அந்தக் கொள்கைகள் வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு சம வாய்ப்புகளை வழங்கு வதையும், சமூக ரீதியிலான இயங்கும்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்